<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,</u>

<u>கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>

அசல் வழக்கு எண்.112/2013 நாள்: 19.07.2019

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மாதையன் பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| பெயர் | : சாந்தி |
| கணவர் பெயர் | : செல்வம் |
| கிராமம் : | தாலுக்கா : |
| வயது : | வேலை : |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் வாதி தரப்பில் சாட்சியாக முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும், என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். இதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

1. வழக்கு சொத்திற்கான பட்டா எண்.175, 74 கொண்ட கணிணி சிட்டாக்கள் இரண்டு வரிசை வா.சா.ஆ.1 ஆகவும்
2. 09.03.2005 தேதியிட்ட கிரைய பத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.2 ஆகவும்
3. 14.03.2013 தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும்
4. பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு கிடைக்கப்பெற்றதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை 3 எண்ணிக்கை வா.சா.ஆ.4 ஆகவும்
5. 4-ம் பிரவாதிக்கு சார்வு செய்யப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறை வா.சா.ஆ.5 ஆகவும்
6. வாதி பெயரில் உள்ள மாற்றுச்சான்றிதழ் அசல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்று ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணை குறித்து வழக்கின் இறுதியில் விடை காணப்படும் என்று ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் கூடுதல் சான்றாவணங்கள் குறியீடு செய்வதற்காக வேண்டி முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வாய்தா போடப்படுகிறது.**